(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

**இல. 11.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2022 பெப்ரவரி 24 வியாழக்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

6/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் குருநாகல் தொடக்கம் தம்புள்ளை வரையிலான நான்காம் கட்டத்தின் நிர்மாணப் பணிக்கான ஒப்பந்தத்திற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இந்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி நெடுஞ்சாலையை அமைப்பதற்கு கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த கம்பெனிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நெடுஞ்சாலையை அமைக்கும் பணிகளின் தற்போதைய முன்னேற்றம் யாது என்பதையும்;

(ii) மேற்படி நெடுஞ்சாலையை அமைப்பதற்கு நிதியைப் பெற்றுக்கொள்ளும் மூலம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

35/2022

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்படும் மனித நுகர்விற்கு உகந்த கீரை வகைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி கீரைகளில் காணப்படும் போசாக்குத் தன்மை தொடர்பில் முறையான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதனை மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) மேற்படி கீரை வகைகளுள் இலங்கைக்கே தனித்துவமான கீரை வகைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உள்ளூர் கீரைகளில் போசாக்கு மற்றும் மூலிகைத் தன்மை அதிகம் என்பதையும்;

(ii) காடழிப்பு மற்றும் இரசாயனப் பசளை பயன்பாட்டின் காரணமாக மேற்படி கீரை வகைகள் அரிதாகி உள்ளதென்பதையும்;

(iii) அவற்றுள் சில கீரை வகைகள் தற்போது அழிந்து விட்டதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) உள்ளூர் கீரை வகைகளை பிரபல்யப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

248/2022

கௌரவ ஹேஷா விதானகே,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி நகரில் தொழில் அலுவலகம் தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி யாதென்பதையும்;

(ii) மேற்படி அலுவலகம் அவ்விடத்தில் தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி அலுவலகத்தினை அவிசாவளைக்குக் கொண்டு செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இரத்தினபுரி மாவட்ட மக்களுக்கு பாரிய சேவையினை வழங்கும் மேற்படி அலுவலகத்தினை அவ்விடத்திலேயே பேணிச் செல்வதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

569/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராமிய மூலதன வங்கி என்ற பெயரில் வங்கி நிறுவப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்தையும்;

(ii) இலங்கை மத்திய வங்கியினால் இவ்வங்கி ஒழுங்குறுத்தப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1022/2022

கௌரவ சாந்த பண்டார,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பத்திக் கைத்தொழில் உள்நாட்டுக் கைத்தொழிலாக இலங்கையில் காணப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) இன்றளவில் பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) மேற்படி தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு அமைச்சிடமுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) பத்திக் உற்பத்தியில் மேற்படி தொழில்முயற்சியாளர்கள் பழைய செயன்முறைகளையும் வடிவமைப்புகளையுமே பயன்படுத்துகின்றார்கள் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஈ) புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நவீன வடிவமைப்பின் பிரகாரம் பத்திக் உற்பத்தி செய்வதற்கு வழிகாட்டும் வேலைத்திட்டமொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

6.

1178/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் சட்டத்தின் கீழ் வருகின்ற, திறைசேரிச் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1192/2022

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021 சனவரி மாதம் தொடக்கம் 2022 சனவரி வரையான காலப்பகுதிக்காக நீதி அமைச்சிற்கு கட்டடமொன்றை வாடகைக்குப் பெறுவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கட்டடம் அமைந்துள்ள இடத்தின் முகவரி யாதென்பதையும்;

(iii) மேற்படி கட்டடத்தை வாடகைக்குப் பெறுவதற்காக செலவிடப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக இலங்கை நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள தருணத்தில், இவ்வாறு கட்டடங்களை வாடகைக்குப் பெறுதல் பொருத்தமானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1311/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021ஆம் ஆண்டில் இலங்கையில் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீது அறவிடப்பட்டுள்ள வட்டி வீதம் யாது;

(ii) நுண் நிதிக் கடன் மீது அறவிடப்படும் வட்டி வீதம் யாது;

(iii) நுண் நிதிக்கடன் வழங்குவதற்காக அரசாங்கம் சட்டரீதியான அனுமதியை வழங்குகின்றதா;

(iv) ஆமெனில், இன்றளவில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1469/2022

கௌரவ ரோஹண பண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் காணப்படும் சிறு நீர்ப்பாசனங்கள் மற்றும் பாரிய நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ்வொவ்வொரு நீர்ப்பாசனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு நீர்ப்பாசனத்திலிருந்து பயன்களைப் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) அநுராதபுரம் மாவட்டத்தின் நீர்ப்பாசன முறைமையை மென்மேலும் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1729/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் மணல் அகழ்வதற்காக புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்திடமிருந்து அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்போது கவனத்தில் கொள்ளப்பட்ட அளவுகோல்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மணல் அகழும்போது நதிகள், நீரோடை கால்வாய்களை உள்ளிட்ட சூழல் முறைமைக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2022 பெப்ரவரி 21 ஆம் திகதிய 2268/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 நவம்பர் 30 ஆம் திகதிய 2256/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள்அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 11 ஆம் திகதிய 2262/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 11 ஆம் திகதிய 2262/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 11 ஆம் திகதிய 2262/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 13 ஆம் திகதிய 2262/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 நவம்பர் 15 ஆம் திகதிய 2254/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

கமத்தொழில் அமைச்சர்,— மரங்களை வெட்டி வீழ்த்துதல் (கட்டுப்படுத்தல்) சட்டத்தின் கீழ் கட்டளை,— (452 ஆம் அத்தியாயமான) மரங்களை வெட்டி வீழ்த்துதல் (கட்டுப்படுத்தல்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 யூன் 18 ஆம் திகதிய 2232/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 5(3) (ஆ) மற்றும் 30(3) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, அச்சட்டத்தின் 48 ஆம் பிரிவின் கீழ் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதிய 2249/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 11.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

வேலையாட்கள் நட்டஈடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

17.

நீதிமன்றங்களை அவமதிப்புச் செய்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

சிசிர ஜயகொடி சியபத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

388/2022

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை சிறுவர்கள் மீதான சரீர தண்டனை தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கையையும்;

(ii) மேற்படி முறைப்பாடுகளின் விளைவாக மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளின் எண்ணிக்கையையும்;

(iii) சரீர தண்டனையானது அரசியலமைப்பின் 11 ஆம் உறுப்புரையை மீறுவதாகக் குறிப்பிட்டு 2020.12.17 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சரீர தண்டனை தொடர்பாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட ரீதியான மற்றும் கொள்கை ரீதியான சீர்திருத்தங்களையும்;

(ii) சரீர தண்டனையைத் தடுப்பதற்கும் இணங்கியொழுகுதலை உறுதிசெய்வதற்குமாக ஏற்படுத்தப்பட்டுள்ள பொறிமுறைகளையும்;

(iii) பலர் சிறுவர்களை பொலிஸ் நிலையத்திற்கும் நீதிமன்றத்துக்கும் கொண்டு செல்ல விரும்பாததால் அவர்கள் மீதான சரீர தண்டனை பிரச்சினைகள் தொடர்பான மனக்குறைகளை கையாள்வதற்கான ஒரு பொறிமுறையை அரசாங்கத்தினால் முன்னெடுக்க முடியுமா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?